DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | : | **Spl.S.C.No. 2 of 2023** |
| **Deposition of witness for** | : | **PW- 2** |
| **Name** | : | சீதாலட்சுமி |
| **Father's/Husband Name** | : | |
| **Age** | : | |
| **Address** | : | |
| | : | |
| **Calling** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**<u>25.6.2025</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் காலம்புளா, கொக்கக்காடில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். எனக்கு துரைமுருகன் என்ற மகனும், இவ்வழக்கில் புகார் கொடுத்த பெண்ணும் குழந்தைகள் ஆவார்கள். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 1ஆம் எதிரி அமீர் மற்றும் 2ஆம் எதிரி நிஜாமுதினை தெரியும். நாங்கள் தாழ்த்தப்பட்ட இந்து பறையர் ஜாதியை சேர்ந்தவர்கள். இவ்வழக்கில் புகார் கொடுத்த என் மகள் அ.சா.1ம் இந்து பறையர் ஜாதியை சேர்ந்தவர். கொரோனா சமயத்தில் என் மகள் அ.சா.1 10ஆம் வகுப்பில் குறைந்த மதிப்பெண் பெற்றார், அவர் என்னிடம்

கடைக்கு வேலைக்கு போவதாக சொன்னார், நான் கேரளாவிற்கு வேலைக்கு போய்விட்டேன். என் மகள் அ.சா.1 கூடலூரில் சைனாபஜார் என்ற கடைக்கு வேலைக்கு போனார். நான் என் மகள் வேலைக்கு போக ஆரம்பித்து 3 மாதம் கழித்து கேரளாவில் இருந்து எங்கள் ஊருக்கு வந்தேன், அப்போது என் மகள் அ.சா.1 வாந்தி எடுத்தார். நான் என் மகள் அ.சா.1 ஐ வண்டிபேட்டையில் உள்ள ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றேன், அவர்கள் என் மகள் அ.சா.1 கற்பமாக இருப்பதாக சொன்னார்கள், பிறகு நான் என் மகள் அ.சா.1 ஐ ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றேன், அங்கிருந்த நர்ஸ் என் மகள் அ.சா.1 ஐ கூடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல சொன்னார்கள், நான் வண்டிக்கு காசு இல்லை என்று சொன்னேன், அவர்கள் வண்டியில் ஏறுங்கள் என்று சொல்லி ஒரு ஜீப்பில் என்னையும், என் மகள் அ.சா.1 ஐயும் கூடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள், அங்கு மருத்துவர் என் மகள் அ.சா.1ஐ பரிசோதனை செய்துவிட்டு அவர் கற்பமாக இருப்பதாக சொல்லி 2 நாட்கள் அட்மிட் செய்தார்கள்.

நான் என் மகள் அ.சா.1னிடம் அவர் கற்பத்திற்கு யார் காரணம் என்று கேட்டேன், அதற்கு அவர் 1வது மைல் பக்கம் ஒரு பையன் என்று சொன்னார், பெயரை சொல்லவில்லை. நான் என் மகள் அ.சா.1 ஒரு பையன் என்று சொன்னவுடன், அந்த பையன் 1ஆம் எதிரி அமீர் என்று நினைத்துவிட்டேன். ஆஸ்பத்திரிக்கு

போலிசார் வந்து என் மகள் அ.சா.1 ஐ கேட்டார்கள், கடைசியாக போலிசார் என்னிடம் கேட்டபோது நான் 1ஆம் எதிரி அமீர் பெயரை சொல்லிவிட்டேன். என் மகள் அ.சா.1 போலிசாரிடம் யார் பெயரை சொன்னார் என்பது எனக்கு தெரியாது. என் மகள் அ.சா.1 கற்பத்திற்கு 2ஆம் எதிரி நிஜாமுதின்தான் காரணம். தற்போது என் மகள் அ.சா.1ற்கு 2 குழந்தைகள் இருக்கிறார்கள், அவர்களின் தந்தை 2ஆம் எதிரி நிஜாமுதின்தான். என் மகள் அ.சா.1 அவரது முதலாவது குழந்தையின் கற்பத்திற்கு 2ஆம் எதிரி நிஜாமுதின்தான் காரணம் என்று சொன்னார். நான் கேஸ் கொடுக்கவில்லை. நான்தான் போலிசில் புகார் கொடுத்தேன். தற்போது சாட்சி தன் மகள் அ.சா.1 தான் புகார் கொடுத்தார் என்று கூறுகிறார்.

ஆஸ்பத்திரியில் இருந்து என் மகள் அ.சா.1ஐ நான் வீட்டிற்கு கூப்பிட்டு வந்து நன்றாக பார்த்துக்கொண்டேன். ஆஸ்பத்திரியில் கார்டு போட்டபோது கேஸ் போட்டிருக்கிறதா என்று கேட்டார்கள், ஆமாம் என்று சொன்னேன், போலிசாரை கேட்டுவிட்டு என் மகள் அ.சா.1ஐ அட்மிட் செய்தார்கள். என் மகள் அ.சா.1 மாதம் மாதம் மருத்துவ பரிசோதணைக்கு சென்றபோது அவரது கணவர் பெயர் 2ஆம் எதிரி நிஜாமுதின் என்றுதான் சொன்னார். என் மகள் அ.சா.1 இடம் அவரது கணவரின் ஆதார் அட்டையை கேட்டார்கள், ஆனால் என் மகள் அ.சா.1 கொடுக்கவில்லை. போலிசார் 1ஆம் எதிரி அமீரையும்,

2ஆம் எதிரி நிஜாமுதினையும் கைது செய்தார்கள். பிறகு என் மகள் அ.சா.1ற்கு பெண் குழந்தை பிறந்தது, அதன்பிறகு 2ஆம் எதிரி நிஜாமுதினின் பெற்றோர்கள் வந்து என் மகள் அ.சா.1யும் அவர் குழந்தையையும் ஏற்றுகொள்வதாக சொன்னார்கள், பிறகு என் மகள் அ.சா.1 ற்கும், 2ஆம் எதிரி நிஜாமுதினுக்கும் நிக்கா நடந்தது. என் மகள் அ.சா.1 முஸ்லீமாக மாறிவிட்டார், அவர் பெயர் தற்போது சோலியா. என் மகள் அ.சா.1 ற்கு DNA டெஸ்ட் எடுத்தார்கள், அதில் என் மகள் அ.சா.1 குழந்தையின் அப்பா 2ஆம் எதிரி நிஜாமுதின் என்று வந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:

1ஆம் எதிரி அமீர் எங்கள் பகுதியில்தான் இருக்கிறார், அவரை எனக்கு நன்றாக தெரியும். என் மகள் அ.சா.1 2ஆம் எதிரி நிஜாமுதினைதான் காதலிப்பதாக என்னிடம் சொல்லியுள்ளார் என்று சொன்னால், அது எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரித்தபோது நானாகதான் 1ஆம் எதிரி அமீர் பெயரை போலிசில் சொல்லியுள்ளேன். என் மகள் அ.சா.1 கொடுத்த புகாரில் என்ன சொல்லியிருக்கிறது என்பது எனக்கு தெரியாது.

<u>2ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:

என் மகள் சைனாபஜாரில் வேலை பார்த்தபோது 2ஆம் எதிரி நிஜாமுதினுடன் பழக்கம் ஏற்பட்டு அவருக்கு குழந்தை பிறந்தது

என்று சொன்னால், என் மகள் அ.சா.1 அப்படி என்னிடம் சொல்லவில்லை, போலிசார் விசாரித்தபிறகுதான் சொன்னார். நான் போலிசில் புகார் கொடுக்கவில்லை, நான் என் மகள் அ.சா.1ஐ ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்தேன், அங்கிருந்து போலிசாருக்கு தகவல் கொடுத்து, போலிசார் வந்து விசாரித்தார்கள் என்று சொன்னால், ஆமாம். நான் என் மகள் அ.சா.1ற்காக 2ஆம் எதிரி நிஜமுதினின் அம்மாவிடமும், மாமாவிடமும் பேசி 2ஆம் எதிரி நிஜாமுதினை என் மகள் அ.சா.1ற்கு திருமணம் செய்து வைத்தேன் என்று சொன்னால், ஆமாம். தற்போது என் மகள் அ.சா.1ம், 2ஆம் எதிரி நிஜாமுதினும் சந்தோஷமாகதான் இருக்கிறார்கள், அவர்களுக்கு 2வது பெண் குழந்தையும் பிறந்துள்ளது.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.06.25 13:19:17 +0530